**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 214/2022**

பெயர் : பக்கிரிசாமி (PW1) (Cross )

த/க/பெ. :

தேதி :27.01.2026

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும்சொத்து மீட்பு பரிகாரம் கேட்டு வழக்குபோட்டுள்ளளேன். சீர்காழி DMC யில் OS. 115/2016 உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தற்போது வச பரிகாரம் கோரி பிராது திருத்தப்பட்டதால் இந்நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றப்பட்டது. டபிராதில் 2 அயிட்டம் சொத்து சொல்லி உள்ளேன். முதல் அயிட்டம் சர்வே எண். 415/3H புஞ்சை 0.16 செண்ட். 2 வது அயிட்ட சொத்து சர்வே எண். 415/1B2 நஞ்சை ஏக்கர் 1.30. 2 வது அயிட்ட சொத்து 1 வது அயிட்ட சொத்திற்கு மேற்கே உள்ளது என்றால் சரிதான். முதல் அயிட்ட சொத்திற்கு நான்கெல்லை ரங்கசாமி மனைக்கு வடக்கு, செல்லம்மாள் மனைக்கு தெற்கு, ரோட்டுக்கு மேற்கு, 2 வது அயிட்டத்திற்கு கிழக்கு. 2 அயிட்ட சொத்துக்களும் ஆதியில் திருவேங்கடன் குமாரர் வெங்கடேசனுக்கு சொந்தமாக இருந்தது. அவர்களிடம் இருந்து என் தாயார் கிரயம் வாங்கிய ஆவணம் வா.சா.ஆ.1 என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் 1வது அயிட்ட சொத்து விபரத்தில் அதில் குறிப்பிட்டுள்ள நான்கெல்லைக்கு உட்பட்டு 7 செண்ட் கம்மி, ஜாஸ்தி உட்பட என்று கண்டுள்ளது என்றால் சரிதான். புஞ்சை 7 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 415/1 நான்கெல்லையில் காளியம்மன் கோயில் பங்ககு என்றுள்ளது. நான் சொல்வது போல் 415/1 நான்கெல்லையில் காளியம்மன் கோயில் பங்கு என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. 2 வது அயிட்டம் நஞ்சை 1 ஏக்கர் 30 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கோயில் சொத்தும் சேர்ந்துதான். கோயில் சொத்து சேர்ந்தது இல்லை நஞ்சை மட்டுமே 1.30 என்றால்சரியல்ல. 1956 ல் கிரயம் வாங்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். இந்த ஆவணப்படி நஞ்சை, புஞ்சை சேர்த்து மொத்தம் 1 ஏக்கர் 37 செண்ட் என்றால் 1.35 கம்பி, ஜாஸ்தி உட்பட பாச வாய்ககால் உட்பட என்று தான் உள்ளது. பிராதில் 1.46 ஏக்கர் என்று போட்டுள்ளது. ஆவணத்தில் குறிப்பிட்ட விஸ்திரணம் 9 செண்ட் கூடுதலாக பிராதில் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. முதல் அயிட்டம் 16 செண்டில்

காளியம்மன்கோயில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 குடும்பத்தில் ஏற்பட்டபாக பிரிவினை ஆவணம்என்றால்சரிதான். அதன் படி என் தாயார் வழககு 1, 2 அயிட்ட சொத்துக்களை எனக்குகொடுத்துள்ளார்என்றால் என் தாயார் கிரய படியும் பாக பிரிவினை படியும் கொடுத்துளளார். என் தாயார் கிரயம் வாங்கியது 1, 2 அயிட்ட சொத்தில் 1.37 ஏக்கர் என் தாயார் கிரயம் வாங்கி பாக பிரிவினையில் 1.46 ஏக்கர் கொடுக்க இயலாது என்றால் சரியல்ல. 1 வது அயிட்டம் சொத்தில் தெற்கே கோயில் உள்ளதா என்றால் எனக்கு திசை தெரியவில்லை. வடக்கே என் ஓட்டுவீடு உள்ளதுஎன்றால் சரிதான். ஓட்டுவீடு முதல் அயிட்டம் 7 செண்டில் அமைந்துள்ளதுஎன்றால் 2 அயிட்ட சொத்திலுமே அமைந்துள்ளது. 9 செண்டில் காளியம்மன்கோயில் அமைந்துள்ளது என்றால் 9 செண்டில் பிரித்து கோயில் அமையவில்லை. 1 அயிட்ட சொத்து 415/3H ஆனது 415/3H1, 415/3H2 என்று உள்ளது என்றால் நான் வழக்கு போடும் போது பிரியவில்லை தற்போது பிரிந்துள்ளது. 415/3H1, என் வீடு உள்ளதுஎன்றால் 415/3H1, 415/3H2 இரண்டிலும் வீடு உள்ளது. 415/3H2 ல் காளியம்மன் கோயில் உள்ளதா என்றால் நஞ்சை புஞ்சை இரண்டிலும் உள்ளது. என் சொந்தம் இல்லாத காளியம்மன் காயிலை அபகரிக்க இந்த வழக்குபோட்டுளளேன் என்றால் சரியல்ல. எத்தனை வருங்களுக்கு முன்பு கோயில் கட்டப்பட்டது என்றால் 1996 ல் கட்டப்பட்டது. மீனாட்சியம்மாளும் நானும் தான் கட்டினோம். தாவா 1 அயிட்ட சொத்தை பொறுத்து சீர்காழி DMC ல் OS. 20/2007 ல் கருப்பையன் என்பவர் பெயரில் போடப்பட்டது என்றால் சரிதான். **அதன் பிராது பி.வா.சா.ஆ. 1 ஆக குறியிடுசெய்யப்படுகிற**து. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அந்த வழக்கில் கருப்பையன் போட்ட எதிர் வழக்குரை என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ. 2 ஆக குறியிடுசெய்யப்படுகிற**து. 27.03.2008 ல் அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை **பி.வா.சா.ஆ. 3, 4 ஆக குறியிடுசெய்யப்படுகிற**து. அந்த தீர்ப்பு மேல் முறையீட்டில் ரத்துசெய்யப்பட்டது. அதற்கான ஆவணத்தை என்னிடம் உள்ளது தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அதன் மேல் முறையீடு ரிமாண்ட் செய்து அனுப்பட்டது என்றால் சரியல்ல. ரத்து செய்யப்பட்டது. விசாரணை நீதிமன்றத்தில் மீண்டும்என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு ஏற்கனேவே வழங்கிய தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதன் மீது நான் தாக்கல் செய்த மேல் முறையீடும் தள்ளுபடிசெய்யப்பட்டது என்றால் அந்த தீர்ப்பின் மீது உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்து 05.01.2026 ல்

எனக்கு சாதகமான தீர்ப்பாகி உள்ளது. நான் அந்த தீர்ப்பாணையை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.01.28 18:27:27 +0530